புதுச்சேரி மாநில தலைமை அலுவலகம்
38, Main Road, Oulgreat,
Near KFC Moolakulam,
Puducherry-605009,
Puducherry - 605009.
Cell: 7810068421,9488420449

PRGI.NO.TNTAM/25/A1635 T/PN/2025/1216/7215/1419

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 | இதழ்: 175 | 30-12-2025 | செவ்வாய் | பக்கம்- 4 | விலை- ரூ.5 | திருச்சி
Volum 01 | Issue: 175 | 30-12-2025 | Tuesday | Pages - 4 | Price- Rs. 5 | Trichy



துணைக் குடியரசுத் தலைவர் சி.பி. இராதாகிருஷ்ணன் திருச்சிராப்பள்ளி விமான நிலையத்திற்கு வருகை தந்ததை முன்னிட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் சரவணன் பூங்கொத்து வழங்கி வரவேற்றார்.



சேலம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தின் மூலம் தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணைய போட்டித்தேர்வுகளுக்கான நடத்தப்பட்ட இலவச பயிற்சி வகுப்பில் பயின்று தேர்வு எழுதி வெற்றி பெற்ற 9 நபர்கள் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி மாவட்ட ஆட்சியரகத்தில் சந்தித்து வாழ்த்து பெற்றனர். உடன் மாவட்ட வேலைவாய்ப்புத்துறை இணை இயக்குனர் முனைவர் மணி உள்ளார்.

# ராமேசுவரத்தில் இன்று காசி தமிழ் சங்கமம் நிறைவு விழா: குடியரசு துணை தலைவர் சி.பி ராதாகிருஷ்ணன், பங்கேற்பு

## –டிரோன்கள் பறக்க தடை

ராமேசுவரம்: டிச. 30–

ராமேசுவரத்தில் இன்று (டிச. 29) நடைபெற உள்ள காசி தமிழ் சங்கமம் நிகழ்ச்சியின் நிறைவு விழாவில் குடியரசுத் துணைத் தலைவர் சி.பி ராதாகிருஷ்ணன், ஆளுநர் ஆர்.என். ரவி ஆகியோர் பங்கேற்க உள்ளனர்.

இதையொட்டி, ராமேசுவரம் பகுதியில் இன்றும், நாளையும் ட்ரோன்கள் பறக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது. காசி தமிழ் சங்கமம் நிறைவு விழா நேற்று (செவ்வாய்கிழமை) ராமேசுவரம் பேருந்து நிலையம் அருகேயுள்ள ஆலய விடுதி வளாகத்தில் நடைபெற உள்ளது.

இந்நிகழ்வில், குடியரசு துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன், தமிழக ஆளுநர் ஆர்.என் ரவி, மத்திய கல்வித் துறை அமைச்சர் தர்மேந்திர பிரதான், மத்திய இணை அமைச்சர் எல்.முருகன் உள்ளிட்டோர் கலந்து



கொள்ள உள்ளனர்.

இந்நிலையில், காசி தமிழ் சங்கமம் நடைபெற உள்ள ஆலய விடுதி வளாகத்தை ராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், காவல் கண்காணிப்பாளர் சந்தீஷ் மற்றும் பாதுகாப்புத் துறை அதிகாரிகள் ஆய்வு செய்து, பாதுகாப்பு தொடர்பாக ஆலோசனை நடத்தினர்.

பின்னர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் சந்தீஷ் செய்தியாளர்களிடம் கூறியதாவது: குடியரசுத் துணைத் தலைவர் சாலை மார்க்கமாக வரும்போது மதுரை ராமேசுவரம் தேசிய நெடுஞ்சாலையில், மண்டபம் ஹெலிபேட்டிலிருந்து ராமேசுவரம் வரையிலான போக்குவரத்து நிறுத்தப்பட்டு குடியரசுத் துணைத் தலைவர் நிகழ்ச்சிக்கான மேடையை வந்தடைந்ததும் மீண்டும் போக்குவரத்து தொடங்கப்படும்.

700 போலீஸார் பாதுகாப்பு: மீண்டும் அவர் புறப்பட்டுச் செல்லும்போது போக்குவரத்து நிறுத்தப்படும் என்பதால், பொதுமக்கள் தங்களது பயணங்களை அதற்கேற்ப திட்டமிட்டுக் கொள்ள வேண்டும். காசி தமிழ்ச் சங்கமம் நிறைவு விழாவில் 5 ஆயிரம் பேர் கலந்து கொள்ள உள்ளனர். இதையொட்டி, 700 போலீஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

குடியரசுத் துணைத் தலைவர் வருகையையொட்டி பாம்பன், மண்டபம், தங்கச்சிமடம், ராமேசுவரம் உள்ளிட்ட பகுதிகளில் 29, 30ம் தேதிகளில் ட்ரோன்கள் பறக்கத் தடை விதிக்கப்பட்டுள்ளது. தடையை மீறி ட்ரோன்கள் பறக்க விடுவோர் மீது வழக்குப் பதிவு செய்து, ட்ரோன்கள் பறிமுதல் செய்யப்படும்.

இவ்வாறு எஸ்.பி.சந்தீஷ் கூறினார்.

# வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க 28ந்தேதி ஒரு நாளில் 2,86,362 பேர் விண்ணப்பம்: தேர்தல் ஆணையம் தகவல்

சென்னை: டிச. 30–

தமிழ்நாட்டில் வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிட்ட பிறகு இதுவரை 7,28,432 பேர் பெயர் சேர்க்க விண்ணப்பம் சமர்ப்பித்துள்ளனர். வாக்காளர் பட்டியலில் பெயர் சேர்க்க நேற்று ஒரு நாளில் 2,86,362 பேர் விண்ணப்பம் அளித்துள்ளனர். வரைவு வாக்காளர் பட்டியலில் ஆட்சேபனை குறித்து 9,410 பேர் படிவம் 7 விண்ணப்பத்தை சமர்ப்பித்துள்ளனர். எஸ்.ஐ.ஆர். பணி மூலம் தமிழ்நாட்டில் 97 லட்சம் வாக்காளர்களை நீக்கி வரைவு வாக்காளர் பட்டியலை ஆணையம் வெளியிட்டது

# திருநின்றவூர் தனியார் பள்ளியில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் தொடர்பான உதவி மையம் மாவட்ட தேர்தல் அலுவலர் மு.பிரதாப் நேரில் ஆய்வு



திருவள்ளூர் டிச 30 :

திருவள்ளூர் மாவட்டம் ஆவடி வட்டம், ஆவடி சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட திருநின்றவூர் தனியார் பள்ளியில் நடைபெற்ற வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம்2026 தொடர்பான உதவி மையத்தினையும், ஆவடி புனித ஜோசப் அரசு உதவி பெறும் பள்ளியில் நடைப்பெற்ற வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் 2026 தொடர்பான உதவி மையத்தினையும் மாவட்ட தேர்தல் அலுவலரும் மாவட்ட ஆட்சியருமான மு.பிரதாப் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு, வாக்குச்சாவடி நிலைய அலுவலர்களிடம் பெறப்பட்ட படிவங்கள் தொடர்பாக கேட்டறிந்து, அப்படிவங்களை கணினிமயமாக்கல் உள்ளிட்ட பணிகளை துரிதமாக மேற்கொள்ள அறிவுறித்தினார்.

தொடர்ந்து, சென்னை பெருநகர மாநகராட்சி, அம்பத்தூர் மண்டலம் அம்பத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அம்பத்தூர் மண்டல அலுவலகத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம்2026 தொடர்பாக மாவட்ட தேர்தல் அலுவலர்/மாவட்ட ஆட்சியர் தலைமையில் உதவி வாக்காளர் பதிவு அலுவலர்கள் மற்றும் வாக்குச்சாவடி நிலைய மேற்பார்வையாளர்களுடன் ஆய்வு கூட்டம் நடத்தி அனைத்து பணிகளையும் விரைவாக முடிக்க வேண்டுமென சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

பின்னர், அம்பத்தூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கொரட்டூர் பகுதியில் உள்ள தனியார் அடுக்குமாடி குடியிருப்பில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்தம் 2026 தொடர்பான உதவி மையத்தினை மாவட்ட தேர்தல் அலுவலர் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டு புதிய வாக்காளர்கள் படிவங்களை வழங்கியவர்களிடம் விபரங்களை கேட்டறிந்தார்.

இதில் வாக்காளர் பதிவு அலுவலரும் ஆவடி மாநகராட்சி துணை ஆணையர் மாரிசெல்வி, உதவி வாக்காளர் பதிவு அலுவலர்கள் செல்வி. ஜீவிதா (திருநின்றவூர் நகராட்சி ஆணையர்), கண்ணன் (ஆவடி வட்டாட்சியர்), உதவி வாக்காளர் பதிவு அலுவலர்கள் லட்சுமணகுமார் (உதவி வருவாய் அலுவலர்), டாலி (அம்பத்தூர் வட்டாட்சியர்), வாக்குச்சாவடி நிலைய மேற்பார்வையாளர்கள், வாக்குச்சாவடி நிலைய அலுவலர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# இதெல்லாம் சாத்தியமா?: சேலத்தில் சூளுரைத்த காந்திமதி! ஆட்சியில் பங்கு !சட்டசபையில் 25 பாமக எம்எல்ஏக்கள்!

சேலம்: டிச. 30–

2026 ஆம் ஆண்டு நடைபெறும் சட்டசபை தேர்தலில் 25 எம்எல்ஏக்கள் சட்டசபைக்குள் செல்வார்கள் என்று பாமக செயல்தலைவர் ஸ்ரீகாந்திமதி தெரிவித்தார்.

மேலும் ஆட்சியிலும் பங்கு பெறுவோம் என தெரிவித்திருந்தார்.

சேலத்தில் ராமதாஸ் தலைமையிலான பாமக பொதுக் குழு கூட்டம் நேறறு நடைபெற்றது. இந்த கூட்டத்தில் செயல்தலைவர் ஸ்ரீகாந்திமதி பேசுகையில், கலப்படம் இல்லாத தங்கங்கள் நீங்கள்தான் (தொண்டர்கள்).

ராமதாஸின் ஆட்டத்தை இனிமேதான் பார்க்க போறீங்க! 2026ஆம் ஆண்டுக்கான தேர்தல் வருது. இன்னும் 5 மாசம்தான் இருக்கு. இந்த தேர்தலில் பாமக ஒரு சாதாரண கட்சியாக இருக்க கூடாது. ஒரு தவிர்க்க முடியாத சக்தியாக மாற வேண்டும்.

நமக்கென ஒரு மரியாதை வேண்டும். நம் சமூகத்தின் நோக்கங்களும் எண்ணங்களும் நிறைவேற வேண்டும் என்றால் சும்மா வெளியே இருந்து ஆதரவு தருவது போதாது. ஆட்சி மாற்றம் வேண்டும். அந்த ஆட்சியில் நமக்கு பங்கு வேண்டும்.

ராமதாஸ் வியூகம் வகுத்து விட்டார். யாருடன் கூட்டணி என்பதையும் யாருக்கெல்லாம் சீட் என்பதையும் முடிவு செய்துவிட்டார். எப்படி ஜெயிக்க வேண்டும் என்பதும் ராமதாஸுக்கு தெரியும். இனிமேல் குறுக்கே பேச யாருமே கிடையாது. காலை வாரி விடவும் யாரும் கிடையாது.

நான் சொல்வதை எழுதி வச்சிக்கோங்க! வரபோகும்



தேர்தலில் குறைந்தது 25 எம்எல்ஏக்களுடன் பாமக சட்டசபைக்குள் நுழையும். நாம் இழந்த அந்த சின்னம் மாம்பழம் மீண்டும் நம் கைக்கு வரும்.

தம்பி அன்புமணிக்கு அதிகாரம் வேண்டும் என்றால் அவர் தனியாக கட்சி ஆரம்பித்துக் கொள்ளட்டும். இதுராமதாஸ் கட்டிய கோட்டை. இங்கு அவர்தான் ராஜா! நீங்கள் (தொண்டர்கள்) எல்லாரும்தான் மந்திரிகள். நான் ராமதாஸின் பொண்ணு மட்டுமில்லை, நான் பாமக தொண்டன். ராமதாஸ் கண்களில் ஆனந்த கண்ணீரை வரவழைக்கத் தயாரா?

துரோகத்தை வீழ்த்துவோம், அய்யாவின் கரத்தை வலுப்படுத்துவோம். கவுரவத் தலைவர் ஜி.கே.மணியையும் சேலம் அருளையும் திமுகவின் கைக்கூலிகள் என சொல்கிறார்கள். அவர்கள் யாரென்று பார்த்தால் ஆர்எஸ்எஸ்ஸின் கைக்கூலிகள்.

பேசுவோர் பேசட்டும். தூற்றுவோர் தூற்றட்டும், நம்முடன் ஐயா இருக்கிறார் என காந்திமதி தெரிவித்தார். காந்திமதி பேச பேச அவருக்கு விசிலும் கைதட்டல்களும் எழுப்பப்பட்டது.

காந்திமதி பேசியதில் அன்புமணி ராமதாஸ் உள்ளிட்டோர் ஆர்எஸ்எஸ்ஸின் கைக்கூலிக் என சொல்லப்பட்டது முக்கியத்துவம் வாய்ந்தது என்றாலும் ஆட்சியில் பங்கு, 25 எம்எல்ஏக்களுடன் சட்டசபைக்குள் நுழைவோம் என அவர் கூறியிருப்பதுதான் முக்கியத்துவம் வாய்ந்தது.

அதாவது பாமக ஒரு பதிவு செய்யப்பட்ட கட்சிதான். இது தேர்தல் ஆணையத்தால் அங்கீகரிக்கப்பட்ட கட்சி அல்ல! மேலும் தற்போது வரை கட்சியும், மாம்பழம் எனும் சின்னமும் அன்புமணி தரப்புக்கு சொந்தமானது என தேர்தல் ஆணையம் தெரிவித்துள்ளது. இதை எதிர்த்து ராமதாஸ் தரப்பு கோர்ட்டுக்கு போயுள்ளனர்.

அங்கீகரிக்கப்பட்ட கட்சிக்குத்தான் தேர்தல் ஆணையம் தலையிட்டு பிரச்சினையை தீர்க்கும். பதிவு செய்யப்பட்ட கட்சியான பாமக பிரச்சினைக்குள் தேர்தல் ஆணையம் நுழைந்தால் இப்படி ஏராளமான பதிவு செய்யப்பட்ட கட்சிகள் இருக்கின்றன. அதற்கெல்லாம் தேர்தல் ஆணையம் நுழைய தொடங்கினால் அவர்களது பணிகளை செய்வதில் தொய்வு ஏற்படும். இது ஒன்று!

இன்னொன்று! கட்சியும், சின்னமும் ராமதாஸிடம் இருந்த போதே பாமகவுக்கு அதிகபடியான சீட்டுகள் கொடுத்தும் சரி தனித்து போட்டியிடும் சரி பாதிக்கு பாதி கூட வென்றதில்லை. அப்படியிருக்கும் 25 எம்எல்ஏக்கள் என்றால் 25 தொகுதிகள் அல்லது அதற்கு மேற்பட்ட தொகுதிகளை பெற்று தோல்விகள் போக 25 தொகுதிகள் என்ற அர்த்தமும் வரும். இது போன்ற வெற்றி தற்போதைய சூழலுக்கு அதுவும் மாம்பழம் இல்லாமல் சாத்தியமில்லை என்கிறார்கள். ஆட்சியில் பங்கு என்பதை திமுக எப்போதுமே ஊக்குவிக்காது, ஒரு வேளை அதிமுக கூட்டணிக்கு என்றால் அங்கு அன்புமணி தலைமையிலான பாமக இருக்கும். அப்போது இவர்களுக்கு 25 சீட் கொடுத்தால் அன்புமணி தரப்புக்கு எத்தனை கொடுப்பது, மற்ற கட்சிகளான பாஜக உள்ளிட்டவைகளுக்கு எத்தனை கொடுப்பது என்ற பிரச்சினை எழும். மேலும் ஆட்சியில் பங்கு என்பதை அதிமுகவும் ஊக்குவித்ததே இல்லை. எனவே ராமதாஸ் தலைமையிலான பாமக யாருடன் கூட்டணி வைக்க போகிறார், அவர்கள் கேட்டது போல் இத்தனை சீட்டுகள் கிடைக்குமா, அப்படியே கிடைத்தாலும் இத்தனை சீட்டுகளிலும் வெல்ல முடியுமா என்பதெல்லாம் கேள்விகளாக உள்ளன.

# ஜனவரி 6 முதல் நடைபெறும் காலவரையற்ற வேலை நிறுத்தத்தில் தமிழ்நாடு அரசு அனைத்துத்துறை பணியாளர்கள் சங்கம் பங்கேற்கும் கௌரவத்தலைவர் ராஜவேலு

வேலூர், டிச 30

வேலூர்மாவட்டம், வேலூர்சத்துவாச்சாரியில் தமிழ்நாடு அரசு அனைத்துத்துறை பணியாளர் சங்கத்தின் மாநில பொதுகுழு கூட்டம் மாநில தலைவர் பாஸ்கர் தலைமையில் நடைபெற்றது. இதில் மாநிலகௌரவத்தலைவர் ராஜவேலு இதில் மாநில அமைப்பு செயலாளர் பூங்கொடி உள்ளிட்ட பலர்கலந்துகொண்டனர்.

இப்பொதுக்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் குறித்து மாநிலகௌரவத்தலைவர் ராஜவேலு செய்தியாளர்களிடம் கூறுகையில் பழைய ஓய்வூதிய திட்டத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். பேரூராட்சிகளில் ஏற்படும்காலிப்பணியிடங்களை இனி தற்காலிக முறையில் தான் ஊழியர்களை பணியமர்த்தப்படும் என்ற அரசாணையை திரும்ப பெற வேண்டும். மத்திய அரசை போலவே மாநில அரசும் 8 ஆவது ஊதியக்குழுவினை அமைத்து அதன் பலன்களை ஊழியர்களுக்கு வழங்க வேண்டும். தோட்டக்கலைத் துறையில் 10 ஆண்டுகள் பணிபுரிந்தவர்களை பணி நிரந்தரம் செய்ய வேண்டும். தமிழக அரசில் காலியாக உள்ள காலிப்பணியிடங்கள் 4 லட்சத்தை உடனே நிரப்ப வேண்டும்.

மேலும் இக்கோரிக்கைகளை வலியுறுத்தி ஜனவரி 6 முதல் அரசு ஊழியர் சங்கம் அறிவித்துள்ள காலவரையற்ற வேலை நிறுத்த போராட்டத்தில் அரசு அனைத்துத்துறை பணியாளர்கள் சங்கமும் கலந்துகொள்ளும் உள்ளிட்ட 16 தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டது.

# வாஜ்பாய் பிறந்தநாள் விழா அறக்கட்டளை சார்பில் மரக்கன்று வழுங்கல்



முன்னாள் பிரதமர் பாரத் ரத்னா அடல் பிகாரி வாஜ்பாய் ஜி அறக்கட்டளை சார்பில் வாஜ்பாய் 102 பிறந்தநாள் விழா கே.வி. குப்பத்தில் கொண்டாடப்பட்டது. அறக்கட்டளை தலைவர் தளபதி தலைமை வகித்தார். செயலாளர் வக்கீல் சரவணகுமார் முன்னிலை வகித்தார். இந்நிகழ்ச்சியில் 102 பேருக்கு பழவகை மரக்கன்றுகள், உணவு பொட்டலங்கள், இளைஞர்களுக்கு விளையாட்டு உபகரணங்கள் ஆகியவை வழங்கி பேசினார். இதில் பாஜக முன்னாள் மாவட்ட செயலாளர் முருகேசன், ஒன்றிய செயலாளர் அசோக் குமார், கல்வி பிரிவு தலைவர் ராஜேந்திரன், அறக்கட்டளை உறுப்பினர்கள் தினேஷ், கவியரசு, ராமமூர்த்தி,கே. கவியரசு உள்பட பலர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சி ஏற்பாடுகளை அறக்கட்டளை நிர்வாகிகள் செய்தனர்.





திருச்சி மாவட்டம் மணப்பாறை வட்டம் புதுப்பட்டி புனித சந்தி யாகப்பர் கோவில் காளை உரிமையாளர் ஆ.இருதய ராஜ் த/பெ.ஆரோக்கியசாமி வடுகபட்டி 21.6. 2022 வயது முதிர்வின் காரணமாக காளை இறந்தது காளையின் நினைவால் வீட்டின் அருகில் புதைத்து செவ்வாய், வெள்ளி சிறப்பு பூஜைகள் நடைபெறும் நினைவு நாள் அன்று பொங்கல் வைத்து சிறப்பு பூஜைகள் செய்து புதுப்பட்டி, வடுகபட்டி, ஊர் முக்கியஸ்த்தர்கள், ஊர் பொதுமக்கள் ஜல்லிகட்டு காளை உரிமையாளர்கள், மாடுபிடிவீரர்கள் என 500 பேர் சைவ சாப்பாடு அண்ணதானம் நடைபெரும் இந்நிலையில் வீட்டில் வருடம் தோரும் கிறிஸ்து பிறப்பை முன்னிட்டு வீட்டில் குடில் செய்து வந்தநிலையில் இந்த வருடம் கிறிஸ்து பிறப்பை முன்னிட்டு ஜல்லிகட்டு காளை நினைவிடத்தில் இயேசு கிறிஸ்த்துவின் குடில் அமைத்து அனைவரும் வந்து பார்வையிட்டு செல்கின்றனர் காளையின் நினைவிடமான இருப்பதால் ஊர் முக்கியஸ்த்தர்கள், ஊர் பொதுமக்கள், ஜல்லிகாட்டு காளை உரிமையாளர்கள் . மாடுபிடி வீரர்கள் சமுக ஆர்வலர்கள் அனைவரும் காளைக்கு மாலை அணிவித்து மெழுகுவர்த்தி ஏந்தி ஜெபம் சொல்லிகோவில் போல் வழிபட்டு செல் கின்றனர், நினைத்த காரியம் நடைபெற வேண்டி சென்ற பலரும் நிறை வேறிவிட்டதாத இருதயராஜ் ரஞ்சித மேரியிடம் கூறியதால் நாங்களும் எங்கள் வீட்டின் கோவில் சாமி போல் தினம் மெழுகுவர்த்தி பற்ற வைத்து சாம்பிராணி ஏற்றி வழிபாடு செய்கின்றிறோம் எனநெகிழ்ச்சியுடன் கூறினார் மார்ச் மாதம் 15ம் தேதி அடித்தொண்டையில் இருந்துதிடீரென செருமல் வந்ததன் காரணமாக மருத்துவர்கள் வந்து சிகிச்சை அளித்தும் பலன் இன்றி தந்தையாகப்பர் கோவில் காலை சின்ன கருப்பன் உயிர் இழந்ததால் கல்லறை அருகிலேயே புதைத்து வழிபட்டு வருகின்றனர்

# சட்டமன்றத் தேர்தலில் யாருடன் கூட்டணி என்பது குறித்து நல்ல முடிவு எடுப்போம் திருச்சியில் டி டி வி தினகரன் பேட்டி:

திருச்சி டிச 30

அம்மா மக்கள் முன்னேற்ற கழகத்தின் தலைவர் டி டி வி தினகரன் இன்று திருச்சி வருகை புரிந்தார் அவர் நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் கூறியதாவது, வருகின்ற சட்டமன்றத் தேர்தலில் எந்த கட்சியுடன் கூட்டணி என்பது குறித்து இன்னும் முடிவு செய்யவில்லை காலம் இருக்கிறது இன்னும் மூன்று மாதத்திற்குள் நிர்வாகிகள் உடன் கலந்து பேசி நல்ல முடிவு அறிவிப்போம், ஜெயலலிதாவின் தொண்டர்கள் அனைவரும் ஒன்றிணைய வேண்டும், என்பதுதான் நாங்கள் ஆரம்பத்தில் இருந்து வலியுறுத்தி வருகிறோம், இதைத்தான் தற்போது பாஜக தலைவர்களும் கூறுகிறார்கள், நாங்கள் எந்த தவறும் செய்யாத பொழுது எங்களை நீக்கியது எப்படி நியாயமாகும் என்பதே தான் நாங்கள் கூறி வருகிறோம். எங்களுடன் கூட்டணி வைத்துக் கொள்ளுமாறு சில கட்சிகள் பேச்சுவார்த்தை நடத்தியது உண்மைதான் ஆனால் முடிவு செய்யவில்லை இவ்வாறு டி டி வி தினகரன் கூறினார். பேட்டையின்போது தலைமை நிலைய செயலாளர் ராஜசேகரன், அமைப்பு செயலாளர் சார்பாக தொண்டைமான் திருச்சி தெற்கு மாவட்ட செயலாளர் செந்தில்நாதன் உள்ளிட்ட நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

# திருச்சி மாவட்டம் , கள்ளக்கம்பட்டி பஞ்சாயத்தை சேர்ந்த ஊர் பொதுமக்கள் மாவட்ட ஆட்சியரிடம் மனு கொடுத்தனர்:

திருச்சி மாவட்டம், மருங்காபுரி வட்டம் , களக்காம்பட்டி பஞ்சாயத்து சேர்ந்த ஊர் பொதுமக்கள் சார்பாக தரம் உயர்த்தப்பட்ட மேல்நிலைப் பள்ளியில் போதிய வகுப்பறைகள், ஆய்வக வசதிகள், கழிப்பறை வசதிகள் மற்றும் ஆசிரியர்கள் இல்லாததால் மாணவர்களின் நலன் கருதி கல்வி திறன் தடைப்படுவதை கருத்தில் கொண்டு கூடுதல் வகுப்பறை, ஆய்வகம் |கழிப்பறை , குடிநீர் மற்றும் ஆசிரியர் ஆகிய வசதிகளை ஏற்படுத்தி தரக்கூடிய திருச்சி மாவட்ட ஆட்சியரிடத்தில் மக்கள் குறைதீர்க்கும் நாளில் மனு கொடுக்கப்பட்டது.

# இலங்கை கடற்படையைக் கண்டித்து மண்டபம் மீனவர்கள் காலவரையற்ற ஸ்டிரைக்

மண்டபம்: டிச. 30–

ராமநாதபுரம் மாவட்டம், மண்டபத்தில் இருந்து 335 விசைப்படகுகளில் ஆயிரத்துக்கும் மேற்பட்ட மீனவர்கள் நேற்று முன்தினம் கடலுக்குச் சென்றனர். இவர்கள் இந்திய கடல் எல்லைப் பகுதியில் நேற்று அதிகாலை மீன் பிடித்துக் கொண்டிருந்தனர். அப்போது சிறிய கப்பலில் வந்த இலங்கை கடற்படையினர், மண்டபம் மீனவர்களை எச்சரித்து, இங்கு மீன்பிடிக்க கூடாது என விரட்டியடித்தனர். இதனால், மீனவர்கள் அப்பகுதியில் இருந்து வேறு பகுதிக்கு படகுகளை கொண்டுசெல்லத் தொடங்கினர்.

அப்போது இலங்கை கடற்படையினர் மண்டபம் பகுதியைச் சேர்ந்த ஜோசப் என்பவரின் படகை மட்டும் சுற்றிவளைத்தனர். படகில் ஏறி சோதனையிட்டு ஜான்தாஸ், அமோஸ்டின், பரலோக ஜெபஸ்டின் ஆன்ட்ரோஸ் ஆகிய மூன்று மீனவர்களை கைது செய்து படகையும் பறிமுதல் செய்தனர். கைதான மீனவர்கள் 3 பேரும் கோர்ட்டில் ஆஜர்படுத்தப்பட்டு யாழ்ப்பாணம் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர். இந்த சம்பவம் மீனவர்கள் மத்தியில் கொந்தளிப்பை ஏற்படுத்தியுள்ளது.

இந்நிலையில், இலங்கை சிறையிலுள்ள மீனவர்களை விடுவிக்க ஒன்றிய, மாநில அரசுகள் நடவடிக்கை எடுக்க வலியுறுத்தியும், இலங்கை கடற்படையினரை கண்டித்தும் மண்டபம் மீனவர்கள் இன்று முதல் காலவரையற்ற வேலைநிறுத்த போராட்டத்தை தொடங்கியுள்ளனர். இதனால் மண்டபம் கோவில்வாடி கடலோரப் பகுதியில் 150க்கும் மேற்பட்ட விசைப்படகுகள் கரைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளன.

# கஞ்சா விற்ற பெண் கைது

திருச்சி, டிச30

திருச்சி, எடமலைப்பட்டி புதூர் பகுதியில் கஞ்சா விற்பதாக போலீசருக்கு தகவல் கிடைத்தது. தகவலின் பேரில் நேற்று போலீசார் சோதனை மேற்கொண்டனர். அப்போது ராம்ஜி நகர் மில் காலனி பெரியார் தெரு அருகே கஞ்சா விற்ற மேல் காலனி பெரியார் தெருவை சேர்ந்த சுரேகா (28) , என்ற பெண்ணை கைது செய்து அவரிடம் இருந்த ஒரு கிலோ 100 கிராம் கஞ்சாவை பறிமுதல் செய்தனர்.

# திருச்சியில் தாய் கண் முன்னே இருசக்கர வாகனம் மீது கார் மோதி சிறுவன் பலி

திருச்சி, டிச.30

திருச்சியை , அடுத்த மணிகண்டன் சூறாளிப் பட்டி பகுதியை சேர்ந்தவர் பொன்மணி இவரது மகன் மித்ரன் வயது ( 6) ,1 ஆம் வகுப்பு படித்து வந்தார். இந்நிலையில் இன்று காலை பொன்மணி தனது மகன் மித்திரன் உடன் இருசக்கர வாகனத்தில் செந்தன்னீர்புரம் பகுதியில் உள்ள தனது தந்தை வீட்டுக் சென்று விட்டு சென்னை திருச்சி தேசிய நெடுஞ்சாலை வழியாக பஞ்சப்பூர் பஸ் நிலையம் அருகே வந்து கொண்டிருந்தார். அப்போது இருசக்கர வாகனத்தின் முன்பகுதியில் மித்ரன் நின்று கொண்டிருந்தார். அப்பொழுது பின்னால் வந்த கார் இருசக்கர வாகனம் எது மோதியது இதில் நிலை தடுமாறி கீழே விழுந்ததில் காரின் பின்பக்க டயர் ஏரி மித்ரன் சம்பவ இடத்திலே உயிரிழந்தான். இந்த விபத்து சம்பவம் குறித்து தகவல் இருந்த தெற்கு போக்குவரத்து புலனாய்வு போலீசார் விரைந்து சென்று கார் மோதி இறந்த மித்திரன் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக திருச்சி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர், இந்த சம்ப வம் குறித்து போலீசார் வழக்கு பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர் .தாய் கண் முன்னே சிறுவன் இறந்த சம்பவம் அந்த பகுதியில் சோகத்தையும் பெரும் பரபரப்பையும் ஏற்படுத்தி உள்ளது.

# திருவெறும்பூர் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி மாநகராட்சி பொது நிதியிலிருந்து ரூ 256.77 லட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டி முடிக்கப்பட்ட கட்டிடங்கள் திறப்பு விழா அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி திறந்து வைத்தார்



திருச்சி டிச 30

திருச்சி மாநகராட்சி வார்டு எண் 46 கொட்டப்பட்டு மந்தை திறந்தவெளி அரங்கம் வார்டு எண் 45 மாமன்ற உறுப்பினர் அலுவலகம் மற்றும் சுகாதார ஆய்வாளர் அலுவலகம் , மேலகல்கண்டார் கோட்டை வார்டு எண் 44 மாமன்ற உறுப்பினர் அலுவலகம் மற்றும் சுகாதார ஆய்வாளர் அலுவலகம், வாக்கு எண் 42 ஆலந்தூர் மந்தை பிடி ஏ எஸ் சென்டர் ,வார்டு எண் 39 கணேஷ் நகர் பகுதியில் புதிய மின்மாற்றி சிறப்பு விழா , வார்டு எண் 40 அக்ரஹாரம் பி டி எஸ் சென்டர் திறப்பு விழா, வார்டு எண் 40 மாமன்ற உறுப்பினர் அலுவலகம் மற்றும் சுகாதார ஆய்வாளர் அலுவலகம் ஒன்றிய காலனி, வார்டு எண் 41 புதிய அங்கன்வாடி கட்டிடம் , காந்தி நகர் இரண்டாவது வீதி வார்டு எண் 41 மாவட்ட உறுப்பினர் அலுவலகம் மற்றும் சுகாதார ஆய்வாளர் அலுவலகம் தீன தயாளு , நகர் வார்டு எண் 41 நொச்சி வயல் புதூர் பகுதியில் புதிய மின்மாற்றி, வார்டு எண் 42 அம்மன் நகர் பகுதியில் புதிய மின்மாற்றி , வார்டு எண் 38 நெய்குணம் மின்மாற்றி, வார்டு எண் 38 ஆதிதிராவிடர் பள்ளியில் ஐ சி டி எஸ் சென்டர், திருநகர் மேற்கு வார்டு என் 38 ஆதிதிராவிடர் பள்ளியில் ஐ சி டி எஸ் சென்டர் ,திருநகர் வடக்கு வார்டு எண் 36 ஸ்டாலின் நகர் பொதுக் கழிப்பறை, வார்டு எண் 36 கொங்கு நகர் மாமன்ற உறுப்பினர் அலுவலகம் சுகாதார ஆய்வாளர் அலுவலகம், வார்டு எண் 37 பழனியாண்டி தெரு நேருஜி நகர் மாமன்ற உறுப்பினர் அலுவலகம் மற்றும் சுகாதார ஆய்வாளர் அலுவலகம், வார்டு எண் 16 அம்மா குளம் கலைவாணர் தெரு பொது கழிப்பறை , வார்டு எண் 16 விஸ்வாஸ் நகர் சோலார் லைட், வார்டு எண் 42 எல்லக்குடி நூலகம் , வார்டு எண் 38 அண்ணா நகர் பிள்ளையார் கோவில் சோலார் மின் இணைப்பு தொடக்க விழா நடைபெற்றது. இவ்விழாவில் பள்ளி கல்வித்துறை அமைச்சரும் தெற்கு மாவட்ட திமுக செயலாளருமான அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி கலந்துகொண்டு கட்டிடங்களை திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் மாநகர கழக செயலாளர் மண்டலகுழு தலைவரும் மு .மதிவாணன், மாவட்ட வருவாய் அலுவலர் பாலாஜி, மாநகராட்சி அதிகாரிகள் உதவி செயற் பொறியாளர் ஜெகஜீவராமன் , உதவி ஆணையர் சரவணன் , பகுதி கழக செயலாளர் நீலமேகம், தர்மா ராஜ், விஜயகுமார், சிவக்குமார், மாமன்ற உறுப்பினர்கள் செந்தில், ரமேஷ், கார்த்திக் ,தாஜுதீன் சீத்தாலட்சுமி, பியூலா கோவிந்தராஜ் ,ரெக்ஸ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# தீரன் தொழிற்சங்க பேரவை மூன்றாம் ஆண்டு!!



மாநில பொதுக்குழு நாமக்கல் ராசிபுரத்தில் நடைபெற்றது. பொது குழுவில் திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினர் ஈ. ஆர் .ஈஸ்வரன் 2026 ஆம் ஆண்டு நாள்காட்டியை வெளியிட முதல் பிரிதியை கொங்குநாடு மக்கள் தேசிய கட்சி வால்பாறை நகரச் செயலாளர் தீரன் தொழிற்சங்க பேரவை நிர்வாக குழு உறுப்பினரும் தோட்டத் தொழிலாளர் பிரிவு மாநில பொதுச் செயலாளர் வால்பாறை அன்பழகன் பெற்றுக் கொண்ட போது அருகில் தீரன் தொழிற்சங்க பேரவை பொதுச் செயலாளர் கொங்கு கோமகன் தொழிற்சங்க தலைவர் ஏ கே .பி. சின்ராஜ் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் நாமக்கல் பாராளுமன்ற உறுப்பினர் மாதேஸ்வரன் மற்றும் கட்சி தொழிற்சங்க நிர்வாகிகள் உடன் உள்ளனர்.

# ஏற்காடு குண்டூர் பழங்குடியினர் மாணவர்களின் சிலம்ப சாதனை



சேலம்,டிச: 30

மாநில அளவில் ஏற்காடிற்கு பெருமை சேர்த்த இளம் வீரர்கள் தனலக்ஷ்மி ஸ்ரீநிவாசன் பல்கலைக்கழகத்தில், நியூ ஏசியன் சிலம்பம் அகாடமி மற்றும் யூனிட்டி ஆஃப் யூத் ஃபவுண்டேஷன் இணைந்து நடத்திய மாநில அளவிலான சிலம்பம் போட்டி ரூ 2025ல், ஏற்காடு குண்டூர் பழங்குடி கிராமத்தைச் சேர்ந்த மாணவர்கள் தங்கள் சிறப்பான திறமையை வெளிப்படுத்தி, மாநில அளவில் ஏற்காடிற்கு பெருமை சேர்த்துள்ளனர்.

இந்தப் போட்டியில் ஒற்றை கம்பு, இரட்டை கம்பு, சுருள், வாள், எட்டி உள்ளிட்ட அனைத்து பிரிவுகளிலும் குண்டூர் பழங்குடியினர் மாணவர்கள் முதல், இரண்டாம், மூன்றாம் பரிசுகளை கைப்பற்றி அசத்தியுள்ளனர்.

மேலும், முழுப் போட்டியின் அடிப்படையில் வழங்கப்பட்ட ஒட்டுமொத்த சாம்பியன் பட்டத்தில், மூன்றாம் இடத்தை வென்று, ஏற்காடு குண்டூர் மக்களின் பெயரை மாநில அளவில் உயர்த்திப் பிடித்துள்ளனர். மலைக் கிராமத்தைச் சேர்ந்த இளம் மாணவர்கள், வளங்களின் குறைபாடு, பயிற்சி தொடர்பான பல சவால்களை கடந்து, தன்னம்பிக்கை, ஒழுக்கம் மற்றும் கடுமையான பயிற்சி மூலம் இந்த உயரிய சாதனையை நிகழ்த்தியுள்ளனர். இது ஏற்காடு மக்களுக்கு பெருமை சேர்த்த

வரலாற்றுச் சிறப்பு மிக்க சாதனையாக பார்க்கப்படுகிறது.

இந்த வெற்றிக்கு உறுதுணையாக இருந்த யூனிட்டி ஆஃப் யூத் ஃபவுண்டேஷன் நிறுவனர் திரு. விஜய் மற்றும் காருண்யா, நியூ ஏசியன் சிலம்பம் அகாடமியின் ஆசான்கள் மற்றும் பயிற்றுவிப்பாளர்கள் அனைவருக்கும் குண்டூர் கிராம மக்கள் மற்றும் ஏற்காடு பகுதி மக்கள் சார்பாக மனமார்ந்த நன்றிகள் தெரிவிக்கப்பட்டன.

இந்த வெற்றி, ஏற்காடு மலைப் பகுதியிலுள்ள பழங்குடியினர் மாணவர்களுக்கான விளையாட்டு வளர்ச்சி, பாரம்பரிய கலை பாதுகாப்பு மற்றும் இளைஞர் முன்னேற்றத்திற்கான புதிய பாதையைத் திறந்துள்ளது. இளம் வயதிலேயே

மாநில அளவில் சாதித்து காட்டிய குண்டூர் பழங்குடியினர் மாணவர்கள் ஏற்காட்டின் எதிர்கால நம்பிக்கையாக ஒளிர்ந்து திகழ்கிறார்கள்.

## கோவை காந்திபுரம் ஓலா பிரத்யேக விற்பனை மையத்தில் நவீன தொழில்நுட்பத்தில் அதிக திறன் கொண்ட எஸ் ஒன் ப்ரோ 4680 பாரத் செல் பேட்டரி ஓலா பைக் அறிமுகப்படுத்தப்பட்டது.

### வாடிக்கையாளர்களுக்கு 100 பேருக்கு ஓலா ஸ்கூட்டர் டெலிவரி செய்யப்பட்டன.




கோயம்புத்தூர் டிசம்பர் 30

கோவை சத்திசாலை காந்திபுரத்தில் உள்ள ஓலா பிரத்யோக விற்பனை மையத்தில் இன்று காலை எஸ் ஒன் ப்ரோ4680 பாரத் செல் பேட்டரி வசதியுடன் கூடிய ஓலா ஸ்கூட்டர் அறிமுகம் மற்றும் விற்பனை தொடங்கியது

ஓலா ஏரியா மேனேஜர் ஸ்ரீராம் கோயம்புத்தூர் ஷோரூம் மேனேஜர் சந்தோஷ் புதிய ஓலா ஸ்கூட்டர் நவீன தொழில்நுட்பத்தில் உருவான பேட்டரியுடன் கூடிய சாவியை வாடிக்கையாளர்களுக்கு வழங்கி விற்பனை தொடக்கி வைத்தனர்.

பின்னர் புதிய ஸ்கூட்டர் குறித்து கூறியதாவது.

இன்று கோயம்புத்தூர், கொச்சி மற்றும் ஹைதராபாத் முழுவதும் டெலிவரிகளைத் தொடங்கியது, மேலும் பெங்களூருவில் தொடர்ந்து ரேம்ப்அப் தொடர்கிறது. S1 Pro+ (5.2 kWh) என்பது நிறுவனத்தின் உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட 4680 பாரத் செல் பேட்டரி பேக் மூலம் இயக்கப்படும் முதல் தயாரிப்பு ஆகும், இது அதிக வரம்பு, அதிக செயல்திறன் மற்றும் மேம்பட்ட பாதுகாப்பை வழங்குகிறது.

வாகனங்களில் அதன் சொந்த 4680 பாரத் செல் பேட்டரி பேக்குகள் மூலம், ஓலா எலெக்ட்ரிக் இப்போது செல் மற்றும் பேட்டரி பேக் உற்பத்தி செயல்முறையை முழுமையாக சொந்தமாக வைத்திருக்கும்

இந்தியாவின் முதல் நிறுவனமாகும், இது இந்தியாவில் முழுமையாக ஒருங்கிணைக்கப்பட்ட மின்சார வாகன சுற்றுச்சூழல் அமைப்பை உருவாக்குவதில் ஒரு முக்கிய மைல்கல்லைக் குறிக்கிறது.

இதுகுறித்து ஓலா எலெக்ட்ரிக்நிறுவனத்தின் செய்தித் தொடர்பாளர் கூறுகையில், "எஸ் 1 ப்ரோ + க்கான தேவை இந்தியாவில் தயாரிக்கப்பட்ட உலகத் தரம் வாய்ந்த எலெக்ட்ரிக் வாகன தொழில் நுட்பத்தை நாங்கள் உருவாக்க திட்டமிட்டதை நிரூபித்துள்ளது. வாடிக்கையாளர்கள் இப்போது எங்கள் சொந்த 4680 பாரத் செல் மூலம் இயக்கப்படும் ஸ்கூட்டர்களின் டெலிவரிகளை எடுத்துக்கொள்கிறார்கள், மேலும் வெளியீடு வலுவான வேகத்தை எடுத்து வருகிறது. டெலிவரிகள் பல இடங்களில் அளவிடப்படுவதால்.

நகர் மற்றும் ஊரகப்பகுதியில் ஒரு பேட்டரி மூலம் 300 கிலோமீட்டர் பயணிக்கலாம்.

அனைத்து பாதுகாப்பு வசதிகளும் புதிய வாகனத்தில் இடம்பெற்றுள்ளன.

## தனியார் பள்ளி பேருந்துகளில் கலெக்டர் நேரில் ஆய்வு




கோவை டிச:30

கோவை மாவட்டத்தில் பள்ளி மாணவ மாணவிகளை அழைத்து வரவும் பள்ளி முடிந்து வீட்டுக்கு கூட்டி செல்லவும் தனியார் பள்ளிகள் பஸ் வேன் உள்ளிட்ட வாகனங்கள் பயன்படுத்தி வருகின்றன வாகனங்கள் முறையாக பராமரிக்கப் படுகிறதா அவற்றில் போதிய வசதி செய்யப்பட்டுள்ளதா ஆபத்தான காலத்தில் அவசர வழி உள்ளதா என்பது குறித்து கலெக்டர் பவன் குமார் பி ஆர் எஸ் மைதானத்தில் ஆய்வு செய்தார். தனியார் பஸ்களில் ஏறி ஆய்வு நடத்தி கலெக்டர் அங்குள்ள ஒரு வேனில் பொருத்தப்பட்டிருந்த சுத்தியலை எடுத்து அவசர உதவி கதவை தட்டி பார்த்து ஆய்வு செய்தார் மேலும் பள்ளி வாகனங்களில் முதலுதவி மருந்துகள் மற்றும் போதிய இருக்கைகள் செய்தியாக பொருத்தப்பட்டுள்ளதா வாகனங்களுக்கு உரிய ஆவணங்கள் உள்ளதா என்று விசாரணை நடத்தினார்.

குறித்து செய்தியாளர்களிடம் கூறுகையில்

கோவை மாவட்டத்தில் உள்ள 4 வட்டாரப் போக்குவரத்து அலுவலகங்கள் மூலம் பதிவு செய்யப்பட்ட 1644 வாகனங்கள் ஆய்வு செய்யப்பட்டது. இதில் 2 தனியார் பள்ளி வாகனங்கள் ஆய்வு செய்யும் பொழுது நிர்ணயிக்கப்பட்ட விதிகள் குறைபாடுகள் கண்டறியப்பட்டதால் அவற்றுக்கான அனுமதியை ரத்து செய்துள்ளோம் பள்ளி வாகனங்கள் இயக்கும் டிரைவர்கள் உடல் கண் பரிசோதனை செய்து கொள்ள வேண்டும் என அறிவுறுத்தினார். இந்த ஆய்வின் போது வட்டாரப் போக்குவரத்து அதிகாரிகள் விஸ்வநாதன், பூங்கோதை மற்றும் அனைத்து வட்டார அலுவலர்கள், காவல் துறை அதிகாரிகள் உடன் இருந்தனர்.

இருக்கும் போது ரத்ததானம்.... இறந்த பின் கண்தானம்



திருச்சி ,தெற்கு மாவட்டம் , பேரூரில் நடைபெற்ற இளைஞர்களுக்கான கபடி போட்டியில் தமிழ்நாடு காங்கிரஸ் கட்சியின் சார்பாக வையம்பட்டி ராகுல் காந்தி இளைஞர் காங்கிரஸ் தலைவர் சிறப்பு விருந்தினர், வையம்பட்டி மாநில செயலாளர் ரமேஷ் குமார், இளைஞர் காங்கிரஸ் மாவட்டத் துணைத் தலைவர் தினேஷ் பாபு மற்றும் கட்சி உறுப்பினர்கள் கலந்து கொண்டு இளைஞர்களுக்கு போட்டியின் ஊக்கம் அளித்து பரிசுகளை வழங்கினார்கள்.

## கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் சிறந்த பள்ளிக்கான தமிழக அரசின், காமராஜர் விருது பெற்ற பள்ளியாக உளுந்தூர்பேட்டை அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளியாக திகழ்கிறது.




கள்ளக்குறிச்சி. டிச. 30–

உளுந்தூர்பேட்டை அரசு பெண்கள் மேல்நிலைப்பள்ளி கடந்த 1974ம் ஆண்டு அரசு உயர்நிலை பள்ளியாக துவங்கப்பட்டது. பின்னர் 1994ம் ஆண்டு முதல் அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளியாகதரம் உயர்த்தப்பட்டு செயல்பட்டு வருகிறது.

இப்பள்ளியில் கடந்த பத்தாண்டுகளாக, 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மாணவிகள் கல்வி பயின்று வருகின்றனர். ஒழுக்கத்துடன் கூடிய தரமான கல்வியை பள்ளி அளித்து வருவதால் மாணவிகளின் சேர்க்கை ஆண்டு தோறும் உயர்ந்து வருகிறது. பெற்றோர்கள் தம் பிள்ளைகளை இப்பள்ளியில் சேர்ப்பதில் பெரிதும் ஆர்வம் காட்டுகின்றனர்.

இப்பள்ளியில் தமிழ் வழி, ஆங்கில வழி என இரு பயிற்று முறை உள்ளது. கற்பிக்கும் ஆசிரியர்கள் ஸ்மார்ட் கிளாஸ் தொழில்நுட்ப உதவியுடன் பல்வேறு கற்றல் முறையில் மாணவிகளுக்கு பள்ளி பாடங்களை கற்றுத் தருகின்றனர். ஸ்மார்ட் கிளாஸ் முறை மாணவிகள் எளிதாக பாடங்களை புரிந்துகொள்ள பெரிதும் உதவுகிறது. இதன் மூலம் 10ம் வகுப்பு மற்றும் பிளஸ் 2 பொதுத்தேர்வுகளில் பள்ளியின் தேர்ச்சி சதவீதம் தொடர்ந்து அதிகரித்து வருகிறது. மாணவிகளை ஒழுங்குப் படுத்துவதற்கு முன்உதாரணமாக இருக்க வேண்டும் என்பதற்காக பள்ளியின் தலைமை ஆசிரியர் சரஸ்வதி பல்வேறு முயற்சிகளை எடுத்து வருகிறார். இதற்காக பள்ளிக்கு காலை 8.30 மணிக்கு தலைமை ஆசிரியர் வருகை புரிந்து மாணவிகளை நல்வழிப்படுத்துதல், சிறப்பு வகுப்புகளை கண்காணிக்கும் பணிகளை மேற்கொண்டு வருகிறார்.

பள்ளிக்கு தேவையான வசதிகளை உயர் அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகளிடம் எடுத்து கூறி அதனை பெற்று தரும் நடவடிக்கைகளில் பெற்றோர் ஆசிரியர் கழகத்தினர் பெரும் பங்காற்றி வருகின்றனர்.

மாணவிகள் கற்றலோடு உடல் திறனில் கவனம் செலுத்த வேண்டும் என்பதற்காக உடற்கல்வி பாட வகுப்புகளில் சிலம்பம், கராத்தே, சதுரங்கம், விளையாட்டு, டென்னிஸ், பூப்பந்து, யோகா போன்ற விளையாட்டுகளுக்கும் பயிற்சி அளிக்கப்படுகின்றன. இதன் மூலம் விளையாட்டு போட்டிகளில் இப்பள்ளி மாணவிகள் மாவட்ட அளவில், மாநில அளவிலும் என பல போட்டிகளில் கலந்து கொண்டு வெற்றி பெற்று பல பரிசுகளை பெற்றுள்ளனர்.

கலைத்திருவிழா போட்டியில் படைப்புத்திறன்களுக்கான போட்டிகளில் கதை கூறல் போட்டியில் இப்பள்ளியில் பத்தாம் வகுப்பு படிக்கும் மாணவி புவனேஸ்வரி மாநில அளவில் வெற்றி பெற்றுள்ளார். இதனால் மாணவி புவனேஸ்வரி அரசு முறை சுற்றுப்பயணமாக வெளிநாடு செல்வதற்கு தேர்வாகியுள்ளார். பள்ளியின் சிறப்பான செயல்பாடுகளால் கடந்தாண்டு மாவட்டத்தின் சிறந்த பள்ளிக்கான தமிழக அரசின், காமராஜர் விருது இப்பள்ளிக்கு வழங்கப்பட்டு கவுரவிக்கப்பட்டுள்ளது.

## ஜனவரி 1 முதல் நெல்லை, முத்துநகர், பொதிகை உள்ளிட்ட 7 ரயில்களின் நேரம் மாற்றம் : தெற்கு ரயில்வே அறிவிப்பு!!

சென்னை : டிச.30

ஜன. 1ம் தேதி முதல் விரைவு ரயில்களின் நேர அட்டவணை மாற்றி அமைக்கப்பட உள்ளது. தண்டவாளங்கள் மேம்படுத்தப்பட்டு, மின்மயமாக்கல் பணிகள் முடிவடைந்த நிலையில் புதிய அட்டவணை வெளியானது. புதிய அட்டவணையின்படி வருகின்ற 2026 ஜனவரி 1ம் தேதி முதல், சென்னை எழும்பூரில் இருந்து தென் மாவட்டங்களுக்கு புறப்படும் ரயில்களின் நேரம் மாற்றப்பட்டுள்ளது. அதேபோல் மறு மார்க்கத்தில் தென் மாவட்டங்களில் இருந்து சென்னைக்கு வரும் ரயில்களின் நேரமும் மாற்றப்பட்டுள்ளது என தெற்கு ரயில்வே தெரிவித்துள்ளது.

சென்னையில் இருந்து தென் மாவட்டங்களுக்கு செல்லும் ரயில்களின் நேர மாற்றம்:

1. சென்னை எழும்பூரில் இருந்து திருச்சிக்கு செல்லும் சோழன் எக்ஸ்பிரஸ் காலை 7:45 மணிக்கு பதிலாக காலை 8:00 மணிக்கு புறப்படும்.

2. சென்னை எழும்பூரில் இருந்து குருவாயூர் வரை செல்லும் எக்ஸ்பிரஸ் காலை 10:20 மணிக்கு பதிலாக, காலை 10:40 மணிக்கு புறப்படும்.

3. எழும்பூரில் இருந்து மதுரைக்கு செல்லும் வைகை எக்ஸ்பிரஸ், மதியம் 1:45 மணிக்கு பதிலாக 30 நிமிடங்கள் முன்கூட்டியே அதாவது 1:15 மணிக்கு புறப்படும்.

4. எழும்பூரில் இருந்து திருநெல்வேலி வரை செல்லும் வந்தே பாரத் எக்ஸ்பிரஸ் மதியம் 2:45 மணிக்கு பதிலாக 3:05 மணிக்கு புறப்படும்.

5. எழும்பூரில் இருந்து தூத்துக்குடி வரை செல்லும் முத்துநகர் எக்ஸ்பிரஸ் இரவு 7:30 மணிக்கு பதிலாக, இனி 15 நிமிடங்கள் முன்கூட்டியே அதாவது, 7:15 மணிக்கு புறப்படும்.

6. எழும்பூரில் இருந்து இரவு 8:10 மணிக்கு செல்லும் பொதிகை எக்ஸ்பிரஸ், இனி 35 நிமிடங்கள் முன்கூட்டியே அதாவது, 7:35 மணிக்கு புறப்படும்.

7. எழும்பூரில் இருந்து இரவு 7:15 மணிக்கு புறப்பட்டு செல்லும் ராமேஸ்வரம் எக்ஸ்பிரஸ், இனி 8:35 மணிக்கு புறப்படும்.

8. எழும்பூரில் இருந்து இரவு 8:40 மணிக்கு புறப்பட்டு செல்லும் நெல்லை எக்ஸ்பிரஸ், இனி 8:50 மணிக்கு புறப்படும். எழும்பூரில் இருந்து திருச்செந்தூர் வரை செல்லும் செந்தூர் எக்ஸ்பிரஸ் மற்றும் கேரளாவின் கொல்லம் வரை செல்லும் அனந்தபுரி எக்ஸ்பிரஸ் ஆகிய ரயில்களின் நேரம் மாற்றப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## பாலக்கரையில் சம்பவம் குளியல் அறையில் இருந்து தவறி விழுந்து மூதாட்டி சாவு :

திருச்சி டிச 30

திருச்சி, பீமா நகர் கூனி பஜார், பகவதி அம்மன் கோவில் தெருவை சேர்ந்தவர் வெங்கடாசலம் இவரது மனைவி ராஜாமணி வயது (68 ) , இவர் தனது மகன் சுரேஷ்குமார் உடன் வசித்து வந்தார் .கடந்த 4 ஆம் தேதி வீட்டின் குளியல் அறைக்கு ராஜாமணி சென்ற போது தவறி விழுந்து தலையில் பலத்த காயம் அடைந்தார். இதையடுத்து ஆபத்தான நிலையில் திருச்சி அரசு மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் , தீவிர சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி ராஜாமணி பரிதாபமாக உயிரிழந்தார். இந்த சம்பவம் குறித்து பாலக்கரை போலீசார் வழக்கு பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## எடமலைப்பட்டி புதூரில் பரிதாபம் 15 அடி உயரம் மாடியில் இருந்து தவறி விழுந்து ஒருவர் சாவு

திருச்சி டிச, 30

திருச்சி ,எடமலைப்பட்டி புதூர் ராஜீவ் காந்தி நகரைச் சேர்ந்தவர் சீனிவாசன் வயது (53 ), கடந்த 25 ஆம் தேதி தனது வீட்டின் மாடியில் 15 அடி உயரத்தில் கட்டுமான பணிகளை செய்து கொண்டிருந்தார். அப்பொழுது திடீரென்று மாடியில் இருந்து தவறி கீழே விழுந்து தலையில் பலத்த காயம் அடைந்தார் . இதையடுத்து ஆபத்தான நிலையில் திருச்சியில் உள்ள தனியார் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டார் . அங்கு சிகிச்சை பெற்று வந்த சீனிவாசன் சிகிச்சை பலனின்றி பரிதாபமாக உயிரிழந்தார் .இந்த சம்பவம் குறித்து எடமலைப்பட்டி புதூர் போலீசார் வழக்கு பதிந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



இந்திய வெளியுறவுத்தறை அமைச்சர் டர்டர் எஸ். ஜெய் சங்கர் திருச்சிராப்பள்ளி விமான நிலையத்திற்கு வருகை தந்ததை முன்னிட்டு மாவட்ட ஆட்சித்தலைவர் சரவணன் பூங்கொத்து வழங்கி வரவேற்றார்.



ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி ஈரோடு மாவட்டம், கள்ளகவுண்டன்பாளையத்தில் கால்நடை பராமரிப்புத்துறையின் சார்பில் தேசிய கால்நடை நோய் தடுப்பூசித்திட்டம், கோமாரி நோய் தடுப்பூசிப்பணி 8வது சுற்றில் கால்நடைகளுக்கு தடுப்பூசி போடும் பணியினை தொடங்கி வைத்து பார்வையிட்டார்.

## திருச்சி மாவட்டம், துவரங்குறிச்சியில் , ஸ்ரீ தர்மசாஸ்தா ஐயப்பனுக்கு மகா மண்டல 34 ஆம் ஆண்டு சிறப்பு அபிஷேகம் நடைபெற்றது



திருச்சி மாவட்டம், துவரங்குறிச்சியில் ஸ்ரீ வெள்ளை விநாயகர் ஆலயத்தில் மூலவர் ஸ்ரீ சௌபாக்கிய மகா கணபதி ஹோமமும் மற்றும் 21 விதமான அபிஷேக ஆராதனைகளை தொடர்ந்து , ஸ்ரீ தர்மசாஸ்தா ஐயப்பனுக்கு 34 ஆம் ஆண்டு மகா மண்டல சிறப்பு அபிஷேக நடைபெற்றது. இந்நிகழ்வில் சுற்றுவட்டார பக்தர்களும் மற்றும் பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு அருள் பெற்றுச் சென்றனர்.

# ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம். 210 மனுக்கள் வரப்பெற்ற நிலையில் பல்வேறு நல திட்ட உதவிகள் வழங்கல்...





ஈரோடு. டிச. 30

ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் நேற்று நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் பெறப்பட்ட மனுக்கள் மீது மேல் நடவடிக்கைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

தமிழ்நாடு முழுவதும் வாரம் தோறும் திங்கட்கிழமை மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நடைபெறுவது வழக்கம்.

அதன்படி நேற்று காலை ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில் மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் ஈரோடு மாவட்ட ஆட்சியர் ச. கந்தசாமி தலைமையில் நடைபெற்றது.

கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை, விதவைகள் உதவித்தொகை, கலைஞரின் மகளிர் உரிமைத்தொகை, கருணை அடிப்படையிலான அரசு வேலை, இலவச வீட்டு மனை கோருதல், வீட்டுமனை பட்டா வேண்டி விண்ணப்பித்தல் மற்றும் காவல்துறை சார்ந்த நடவடிக்கைகள் குறித்து பொதுமக்களிடமிருந்து நேற்று நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மனுக்கள் வழங்கப்பட்டது.

இதில் 210 மனுக்கள் பெறப்பட்ட நிலையில் அந்த மனுக்கள் மீது மேல் நடவடிக்கைக்கு உத்தரவிடப்பட்டுள்ளது.

மேலும் தாட்கோ சார்பில் இரண்டு நபர்களின் இயற்கை மரணத்தின் அடிப்படையில் அவர்களின் வாரிசுதாரர்களுக்கு தலா 50 ஆயிரம் நிதி உதவி வழங்கப்பட்டது.

நேற்று நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டத்தில் இதுபோன்று பல்வேறு நல திட்ட உதவிகளை ஆட்சியர் ச. கந்தசாமி வழங்கினார். கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் சு. சாந்தகுமார் உள்ளிட்ட துறை சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

# என்னை 20,30 துண்டுகளாக வெட்டியிருக்கலாமே அன்புமணி!கதறி அழுத ராமதாஸ்!தேற்றிய காந்திமதி!..

சேலம். டிச. 30–

என் மகன் அன்புமணி என்னை 20,30 துண்டுகளாக வெட்டி வீசியிருந்தாலும் பரவாயில்லை எனத் தோன்றுகிறது என சேலம் பொதுக் குழு கூட்டத்தில் ராமதாஸ் கண்ணீர் விட்டு அழுதார்.

உடனே தொண்டர்கள் அய்யா அய்யா என அழைத்தனர். அருகே இருந்த மகள் ஸ்ரீகாந்திமதியும் தந்தையை தேற்றினார். அவருடன் ஜிகே மணி, அருள், ஸ்ரீகாந்தி, தொண்டர்களும் அழுதனர்.

சேலத்தில் நடந்த பாமக பொதுக் குழு கூட்டத்தில் பாமக நிறுவனர் ராமதாஸ் பேசுகையில், “நான் அழுதுக் கொண்டே படுத்திருந்தேன். என் தாய் என் கனவில் வந்து “ஏம்ப்ப அழுகுறே”னு கேட்டாங்க. அதற்கு நான் உன் பேரன் (அன்புமணி)(நா தழுதழுக்கிறது), என் கழுத்தில் துணியை போட்டு இறுக்கி கொல்ல வேண்டும் என ஒருவன் பதிவு போடுகிறார், அவரை அழைத்து பதவி கொடுக்கிறான் என்றேன். அப்போது என் தாய் “உன் மகனை நீ சரியாக வளர்க்கவில்லை” என என்னை கண்டித்தார். அப்போதுநானும் “ஆமாம்மா, நான் சரியாக வளர்க்கவில்லை” என்றேன்.



சொத்து தகராறு: சென்னையில் சொத்து தகராறால் தந்தையை 20, 30 துண்டுகளாக வெட்டியதை செய்தியில் படித்திருப்பீர்கள். அது போல் என்னையும் அன்புமணி வெட்டியிருந்தால் நான் போய் சேர்ந்திருப்பேனே! என் மார்பில் அன்புமணி ஈட்டியால் குத்துவது போல் குத்துகிறார். சில்லறை பசங்களை வைத்துக் கொண்டு என்னை அன்புமணி தூற்றுகிறார், அவமானப்படுத்துகிறார். ஒவ்வொரு நாளும் தனது ஆதரவாளர்களை வைத்துக் கொண்டு அன்புமணி தினம் தினம் என்னை கேவலப்படுத்துகிறார். அவர்களையும் நான்தான் வளர்த்துவிட்டேன். அது என் தவறுதான்!

அன்புமணிக்கு என்ன குறை வைத்தேன்?: நான் அன்புமணிக்கு என்ன குறை வைத்தேன்? அவரை மான்ட்போர்ட்டில் படிக்க வைத்தேன். எம்பிபிஎஸ் படிக்க வைத்தேன். மத்திய அமைச்சராக்கினேன். மாநிலங்களவை எம்பியாக்கினேன்.

அன்புமணிக்கு ஏன் இந்த அவசரம்?: என்னை போன்ற ஒரு தகப்பன் அவருக்கு கிடைப்பாரா, நான் அவ்வளவு செய்திருக்கிறேன். எனது மருத்துவர்கள் கூட “ஏன் அன்புமணி இப்படி செய்கிறார்? இன்னும் 5 அல்லது 6 ஆண்டுகள் (ராமதாஸுக்கு வயதாகிவிட்டதால் 5, 6 வருடங்கள் கழித்து என்ன வேண்டுமானாலும் நடக்கலாம் என்ற அர்த்தத்தில் அவர்கள் கேட்டனர்) பொறுமையாக இருக்கக் கூடாதா? ஒரு நிர்வாகி மருத்துவரிடம் சென்ற போது அவரிடம் ஒரு சீனியர் மருத்துவர், ஐயாவுக்கு எத்தனை மகன்கள் என கேட்டாராம். அதற்கு அவர் ஒரே ஒரு மகன்தான் என்றாராம். அதற்கு அந்த டாக்டர், ஏன் இப்படி ஐயாவை பாடாய்படுத்துகிறார் என கேட்டாராம். இப்படி எல்லாரும் அன்புமணியை பொறுமையாக இருக்கக் கூடாதா என்றுதான் கேட்கிறார்கள்.

பெரிய பதவிகள்: நான் நினைத்திருந்தால் பெரிய பதவிகளை வகித்திருப்பேன். ஆனால் நான் அதை செய்யவில்லை. நான் எந்த பதவியும் வகிக்க மாட்டேன் என செய்த சத்தியத்தை இன்று வரை காப்பாற்றி வருகிறேன். அன்புமணிக்கு காலம் பதில் சொல்லும், அன்புமணியை நினைத்தால் தூக்க மாத்திரை போட்டால் கூட தூக்கம் வரவில்லை.

5 சதவீதம் பேர் கூட இல்லை: ஆனால் மக்களையும் பாட்டாளி சொந்தங்களையும் நினைக்கும் போது எனக்கு புத்துணர்ச்சி ஏற்படுகிறது. அன்புமணியின் பின்னால் 5 சதவீதம் பேர் கூட இல்லை. ஆனால் என் பின்னால் 95 சதவீதம் சொந்தங்கள் உள்ளார்கள். எனவே அன்புமணி நினைப்பது நடக்காது. வரும் 2026 ஆம் ஆண்டு நடைபெறும் தேர்தலில் அன்புமணிக்கு உரிய பாடம் புகட்டுவோம். அவர் இனியும் மாற மாட்டார். அவருக்கு காலம்தான் பதில் சொல்லும்.

கூட்டணி யாருடன்?: நான் சிலரிடம் நேருக்கு நேர் ஆலோசனை நடத்தியுள்ளேன். அப்போது அவர்களிடம் யாருடன் கூட்டணி வைப்பது என கேட்டிருந்தேன். அவர்கள் கூறிய பதிலை வைத்து நான் முடிவு செய்துள்ளேன். எனவே நாம் அமைக்கும் கூட்டணி வெற்றிக் கூட்டணியாக இருக்கும். எல்லாரும் பத்திரமாக வீடு போய் சேருங்கள். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

# காரமடையில் உள்ள அருள் தரும் ஸ்ரீ ஐயப்பன் திருக்கோவிலில் 56 ஆம் ஆண்டு விளக்கு பூஜை மற்றும் அன்னதான விழா!!



கோவை, டிசம்பர்:30

கோவை மாவட்டம், காரமடை காந்தி மைதானம் பகுதியில் உள்ள ஸ்ரீ சபரி வாசன் ஐயப்பன் ஸ்ரீ அம்மன் திருக்கோயிலில் 56 ஆம் ஆண்டு விளக்கு பூஜை மற்றும் அன்னதான விழா நடைபெற்றது. இவ்விழாவை முன்னிட்டு 28ம் தேதி காலை மகா கணபதி ஹோமம் பூஜை தொடங்கி ஐயப்ப சுவாமிக்கு அலங்கார பூஜை, தீபாராதனை மற்றும் பிரசாதம் வழங்குதல் நடைபெற்றது. தொடர்ந்து செண்டை மேளம், நாதஸ்வர இசை, வான வேடிக்கை, பஜனையுடன் ஸ்ரீ ஐயப்பன் திருவீதி உலா தேரில் எழுந்தருளி அனைவருக்கும் அருள் பாலித்தார். இதனை அடுத்து மாலை விளக்கு பூஜையில் திரளான பெண்கள் கலந்து கொண்டு ஓம் சக்தி கோவிலில் தொடங்கி தட்டில் விளக்குடன் தேர்வீதிகளில் அணிவகுப்பாய் சென்று கோவிலை வந்தடைந்தார்கள். மறுநாள் 29ம் தேதி பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற்று அதிகாலையில் மாலையிட்ட ஐயப்ப பக்தர்கள் குண்டம் இறங்குதல் நிகழ்ச்சியில் கலந்து நேர்த்திக்கடன் செலுத்தினார்கள். பின் மதியம் 12 மணிக்கு கோவில் வளாகத்தில் நடைபெற்ற அன்னதானத்தை ஸ்ரீ ஐயப்பன் பூஜா சங்கம் தலைவர் பாரதி தொடங்கி வைத்தார். செயலாளர் விஜயகுமார், பொருளாளர் பிரபு ஆகியோர் முன்னிலை வகித்தார்கள். இந்த விழாவிற்கான ஏற்பாடுகளை ஸ்ரீ ஐயப்பன் பூஜா சங்கம் நிர்வாக கமிட்டியினர் மற்றும் ஐயப்ப பக்தர்கள் சிறப்பாக செய்திருந்தார்கள்.

# பொன்.புதுப்பட்டி ரோட்டரி சங்கம் சார்பில் இலவச சேவை.



புதுக்கோட்டை மாவட்டம் பொன்னமராவதி பொன். புதுப்பட்டி ரோட்டரி சங்கம் சார்பில் சாலையோரம் குளிரில் படுத்து உறங்கும் பொதுமக்களுக்கு இலவச போர்வை வழங்கப்பட்டது. இதில் ரோட்டரி சங்க தலைவர் தலைமை வகித்து பொன்னமராவதி முக்கிய பகுதிகளான சந்தைப்பேட்டை, அழகிய நாச்சியம்மன் கோவில் ,அண்ணா சாலை, நாட்டுக்கல் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள பயனாளிகளுக்கு போர்வைகள் வழங்கப்பட்டது. இச்சேவையில் சுமார் 50க்கும் மேற்பட்டோர் பயனடைந்தனர் .

# கள்ளக்குறிச்சி மாவட்டம், பிரிதிவிமங்கலம் கிராமத்தில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு ரூ.3 லட்சம் நிதியுதவி!!

சென்னை : டிச.30–

கள்ளக்குறிச்சி மாவட்டம், பிரிதிவிமங்கலம் கிராமத்தில் மின்சாரம் தாக்கி உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் நிதியுதவி அறிவித்துள்ளார்.

இது தொடர்பாக வெளியிடப்பட்ட செய்தி குறிப்பில், “கள்ளக்குறிச்சி மாவட்டம் மற்றும் வட்டம், பிரிதிவிமங்கலம் கிராமத்தில் வசிக்கும் திரு. ராஜகோபால் (வயது 57) த/பெ.அய்யாக்கண்ணு என்பவர் (28.12.2025) காலை சுமார் 9.00 மணியளவில் தனக்குச் சொந்தமான கிணற்றில் உள்ள விவசாய மின்மோட்டாரினை விவசாயத்திற்காக இயக்கும்போது எதிர்பாராதவிதமாக மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார் என்ற துயரகரமான செய்தியைக் கேட்டு மிகவும் வருத்தமும் வேதனையும் அடைந்தேன்.

மேலும், இச்சம்பவத்தில் உயிரிழந்தவரின் குடும்பத்தினருக்கும் அவரது உறவினர்களுக்கும் எனது ஆழ்ந்த இரங்கலையும் ஆறுதலையும் தெரிவித்துக்கொள்வதோடு, உயிரிழந்த திரு. ராஜகோபால் அவர்களின் குடும்பத்தினருக்கு மூன்று இலட்சம் ரூபாய் முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்கிடவும் உத்தரவிட்டுள்ளேன்,”

இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இருக்கும் போது**

**ரத்ததானம்.... இறந்த பின்**

**கண்தானம் செய்வீர்....**

# கால்நடைகளுக்கான கோமாரி நோய் தடுப்புப் பணி முகாம்: எம்பி, எம்எல்ஏ பங்கேற்பு



வந்தவாசி, டிச 30:

தமிழ்நாடு அரசு கால்நடை பராமரிப்பு துறை திட்டத்தின் கீழ் திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி ஒன்றியம், இளங்காடு ஊராட்சியில் தேசிய கால்நடை நோய் தடுப்பு திட்டம் சார்பில் கோமாரி நோய் தடுப்பு பணி முகாமை ஆரணி பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தரணிவேந்தன், வந்தவாசி சட்டமன்ற உறுப்பினர் எஸ்.அம்பேத்குமார் ஆகியோர் துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றினர். மேலும் கால்நடை மருத்துவர்கள், கால்நடை பராமரிப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

இதில் பங்கேற்ற பொது மக்களுக்கு கால்நடைகளை பராமரித்தல், நோய் கிருமிகளில் இருந்து பாதுகாத்தல் போன்ற விழிப்புணர்வு தகவல்கள் வழங்கப்பட்டது. அனைத்து கால்நடைகளுக்கும் தடுப்பூசி போடப்பட்டது.

# திருச்சியில் 3வது பெடரேஷன் கப் கோல் ஷாட் பால் தேசிய சாம்பியன்ஷிப் போட்டி தமிழ்நாடு மகளிர் அணி முதலிடம் பெற்று சாதனை

திருச்சி. டிச 30

திருச்சியில் 3வது பெடரேஷன் கப் கோல் ஷாட் பால் தேசிய சாம்பியன்ஷிப் போட்டி திருச்சி, மணிகண்டம், இந்திரா கணேசன் குரூப் ஆஃப் இன்ஸ்டிடியூஷன்ஸில் டிசம்பர் 25 முதல் டிசம்பர் 28, 2025 வரை நடைபெற்றது. இதில் மகளிர் பிரிவில் இந்திரா கணேசன் குரூப் ஆஃப் இன்ஸ்டிடியூஷன் கோப்பையை தமிழ்நாடு மாநில மகளிர் அணி 22 புள்ளிகளைப் பெற்று முதலிடத்தைப் பிடித்தது கைப்பற்றியது. இரண்டாவது இடத்தை பீகார் மகளிர் அணி 18 புள்ளிகளைப் பெற்று ஸ்ரீ காளிஸ்வரி குரூப் ஆஃப் கம்பெனிகள் சிவகாசி கோப்பையை கைப்பற்றியது. மூன்றாம் இடத்தை





சிறு மலர் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, செட்டிகுளம், பெரம்பலூர் மாவட்ட கோப்பை, ஆந்திரப் பிரதேச மகளிர் அணி கைப்பற்றியது ஆண்கள் பிரிவில் இந்திரா கணேசன் குரூப் ஆஃப் இன்ஸ்டிடியூஷன் கோப்பையை ஜம்மு காஷ்மீர் மாநில ஆண்கள் அணி 28 புள்ளிகள் பெற்று முதல் இடத்தையும், சிவகாசி ஸ்ரீ காளிஸ்வரி குழு நிறுவனங்கள் கோப்பையை மகாராஷ்டிரா மாநிலம் ஆண்கள் அணி 20 புள்ளிகள் பெற்று இரண்டாம் இடத்தையும் , பெரம்பலும் செட்டிகுளம் சிறு மலர் மெட்ரிகுலேஷன் மேல்நிலைப்பள்ளி கோப்பை கேரள மாநிலம் 12 புள்ளிகள் பெற்று மூன்றாவது இடத்தை பிடித்தது. போட்டி லீக் கம் நாக் அவுட் முறையில் நடத்தப்பட்டது. . போட்டிக்கு தலைமை விருந்தினராக சிவகங்கை மாவட்ட கூடுதல் காவல் கண்காணிப்பாளர் எல். பிரான்சிஸ் கலந்துகொண்டு கோப்பைகளை வழங்கினார்கள். மேலும் சர்வதேச கோல் ஷாட் பால் கூட்டமைப்பின் நிறுவனர் மற்றும் பொதுச் செயலாளர் நோட்டல ராஜேந்திர பிரசாத், இந்திய கோல் ஷாட் பால் சங்கத்தின் பொருளாளர் ராம்பிரவேஷ் குமார், சாம்பியன்களுக்கு கோப்பைகளை விநியோகித்தனர் தமிழ்நாடு கோல் ஷாட் பால் சங்கத்தின் பிற சிறப்பு விருந்தினர்கள் தலைவர் டாக்டர் ராஜசேகரன், துணைத் தலைவர்கள் சண்முகநாதன், தமிழ்வாணன், எஸ்.பி. அண்ணாமலை, பவானி, நித்யா, டாக்டர் கே. சீனிவாசன், ஆலோசனைக் குழு தலைவர் மற்றும் திருச்சி மாவட்ட கோல் ஷாட் பால் சங்கத் தலைவர் டாக்டர். பாலகிருஷ்ணன் மற்றும் சங்கத்தின் இணைச் செயலாளர் ஜெயப்பிரசாத் ஆகியோர் கலந்து கொண்டு போட்டியை சிறப்பித்தனர். முன்னதாக தமிழ்நாடு கோல் ஷாட் பால் சங்கத்தின் துணைத் தலைவர் விக்னேஷ்வன் வரவேற்றார். முடிவில் தமிழ்நாடு கோல் ஷாட் பால் சங்கத்தின் தென்னிந்திய பொறுப்பாளர் மற்றும் பொதுச் செயலாளர் ஆர். கருணாகரன் நன்றி கூறினார்.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421